செ.வெ.எண்:765 நாள்:20.11.2019

# இருமடங்கு உற்பத்தி மும்மடங்கு வருமானம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் உழவர் உற்பத்தியாளர் நிறுவன ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிக துறையின் மூலம் உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சிறு விவசாயிகள் வணிக நட்புமைப்பின் உதவியுடன் இயங்கி வரும் இராசஇராசசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தினை அம்மாபேட்டையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் திரு.ம.கோவிந்தராவ் இ.ஆ.ப அவர்கள் ஆய்வுமேற்கொண்டார்கள்

இந்நிகழ்வில் இராசஇராசசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு மணிமொழியான் அவர்கள் கூறுகையில் இராசஇராசசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனமானது ஆறு வட்டாரங்களை உள்ளடக்கிய 1033 பங்குதாரர்களை கொண்டு இயங்கிவருகிறது. மேலும் இந்நிறுவனமானது வேளாண் வணிக துறையின் உதவியுடன் உளுந்து கொள்முதல், நெல் விற்பனை, தரமான விதை நெல், உரங்கள் மற்றும் கரும்பு விற்பனை செய்ததன் மூலம் ரூபாய் 4.5 கோடி நிகர வருமானம் இந்நிறுவனத்திற்கு கிடைக்கப்பெற்றுள்.மேலும் உழுவை மற்றும் அறுவடை இயந்திரங்களை குறைந்த விலையில் வாடகைக்கும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.NAFED (நேபெட்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் நிறுவனமாக இயங்கி உளுந்து கொள்முதல் செய்ததன் மூலம் உளுந்து விலையினை நிலை நிறுத்தி விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயரத்தியதாக கூறினார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறுகையில் :-

இராசஇராசசோழன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயல்பாடுகளையும் அரசின் திட்டங்களையும் பார்வையிட்டு இயக்குனர்களுடன் கலந்துரையாடினார்கள்.அப்போது இந்நிறுவனத்திற்கு இணையதள மூலமாக வர்தகம் செய்யும் வசதியினையும் இந்நிறுவனத்திற்கான வலைதளத்தினை உருவாக்கி விற்பனையை பெருக்க ஆலோசனை வழங்கினார். மேலும் அரசின் திட்டங்கள் உழவர் உற்பத்திதியாளர் நிறுவனத்திற்கு கிடைக்க வழிவகை செய்யப்படும் எனவும் குழு சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைபடுத்த வாய்ப்புகளை ஏற்படுத்தி தர வழிவகை செய்யப்படும் எனவும்மேலும் இந்நிறுவனத்தில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் ஒற்றுமையுடன் செயல்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளும்மாறு மாவட்ட ஆட்சி தலைவர் திரும. கோவிந்தராவ் இ.ஆ.ப அவர்கள் வாழ்த்தினார்கள். மேலும் திருமலைசமுத்திரத்தில் உள்ள நவீன அரிசி ஆலையினையும் ஆய்வு மேற்கொண்டார்கள்.

வேளாண் விற்பனை மற்றும் விற்பனைதுறையின் துணை இயக்குனர் அவர்கள் கூறுகையில் இந்நிறுவனத்திற்கு வேளாண் வணிக துறையின் மூலம் ரூபாய் 15.4 இலட்சம் மதிப்பிலான உளுந்து மதிப்புகூட்டு இயந்திரம் மற்றும் ரூபாய் 60 இலட்சம் மதிப்பிலான விதை சுத்திகரிப்பு நிலையம் வழங்கி இருப்பதாக தெரிவித்தார்கள்.

ஆய்வின் போது வேளாண் விற்பனை மற்றும் விற்பனைதுறையின் துணை இயக்குனர் திரு சுரேஷ்பாபு வேளாண் அலுவலர்கள் திருமதி சிவகாமி , கனிமொழி மற்றும் திரு பிரதீப் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண் அலுவலர திரு கௌதமன் , வேளாண் வணிகம் வேளாண் உதவி அலுவலர்கள் ஆகியோர் மற்றும் இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

---

*செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.*